**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.3/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மீனா | மதம் | : இந்து |
| க/பெ | : அங்கப்பன் | ஜாதி | : -- |
| வயது | : 44 | கிராமம் | : வில்லிவாக்கம் |
| தொழில் | : வாழையிலை கடை | வட்டம் | : பூந்தம்மல்லி |

**08.07.2025**
**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள ஏழுமலை எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன் ஆவார். கிருஷ்ணன் எனக்கு அப்பா ஆவார். முரளி எனது தம்பி ஆவார். 21.10.2019ல் என் அப்பா என் அண்ணன் ஏழுமலைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தாரா என்றால் 4 செண்ட்டிற்கு வீடு கட்டவேண்டும் என்று சொல்லி ஏமாற்றி மொத்த சொத்தையும் வாங்கி கொண்டார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவிற்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரிதான். ஆவணம் எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து 1 ஏக்கர் 3 செண்ட் போக என் அப்பா பெயருக்கு 2 ஏக்கர் சொத்து இருக்கும் என்றால் சரிதான். அது 2 ஏக்கரா அதற்கு மேலா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் சொத்து உள்ளது. புல

எண்.31/1ல் சுமார் 1531 சதுரடி உள்ள மச்சு வீடு என் அப்பா பெயரில் உள்ளது என்றால் புல எண் தெரியாது. ஆனால் என் அப்பா பெயரில் ஒரு மச்சு வீடு உள்ளது. புல எண்.29/25ல் இருந்த சொத்தை 2024 ஜுலையில் சுமார் 15 லட்சத்திற்கு என் அப்பா விற்றார் என்றால் புல எண் தெரியாது. ஆனால் என் அப்பா விற்ற போது அண்ணனும் கூட இருந்தார்.

(சாட்சி கூண்டில் இருந்து கொண்டு சாட்சி வழக்கறிஞரிடம் பலத்த குரலில் சண்டையிட்டதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)